# UDHAYAM POLYTECHNIC COLLEGE

**Ariyankundu (PO), Thangachimadam (Via),**

**Rameswaram, Ramanathapuram(Dist) Pin: 623 529**

## கல்லூரியின் விதிமுறைகள் (Terms and Conditions)

1. கல்வி கற்கும் பயிலகம், கோவிலுக்குச் சமமாகும், எனவே இந்தக் கல்லூரியில் ஒழுக்கத்திற்கு முதலிடம் தரப்படும், எனவே மாணவர்கள் ஒழுக்கம் தவறாதிருத்தல் அவசியம்.
2. மாணவர்கள் கண்டிப்பாக கல்லூரி சீருடை, கல்லூரி அடையாள அட்டை மற்றும் ஷு அணிந்து வரவேண்டும்.
3. சீருடையை சரியாக அணிந்திருக்க வேண்டும். வழக்கத்திற்கு மாறாக வித்தியாசமான முடி அலங்காரம் செய்தல் தாடி வளர்த்தல், நீளமான முடி மற்றும் நகம் வளர்த்தல் தவிர்க்கப்பட வேண்டும்.
4. கல்லூரிக்கு நேரம் தவறாமல் வரவேண்டும். தவறும் பட்சத்தில் கல்லூரியின் நடவடிக்கையை ஏற்றுக் கொள்ளவேண்டும்.
5. வகுப்புகளுக்கு விடுப்பு எடுப்பதற்கு மாணவரின் பெற்றோர் அல்லது கண்காணிப்பாளர் நேரடியாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ கல்லூரி நிர்வாகம் அல்லது பொறுப்பாசிரியரைத் தொடர்பு கொண்டு அனுமதி பெற வேண்டும்.அனுமதியின்றி விடுப்பு எடுக்கும் பட்சத்தில் மாணவர், தன் பெற்றோருடன் கல்லூரி நிர்வாகத்தின் அனுமதி பெற்ற பின்னரே வகுப்பறைக்குள் அனுமதிக்கப்படுவார்.
6. கல்லூரிச் சேர்க்கையின்போது உண்மையான முகவரி மற்றும் தொலைபேசி எண்களைக் கொடுக்க வேண்டும். அவைகளை மாற்றக்கூடாது. அவ்வாறு மாற்றும் பட்சத்தில் உடனடியாக கல்லூரி நிர்வாகத்திற்கு தெரிவித்து புதிய முகவரி அல்லது தொலைபேசி எண்ணை கல்லூரி அலுவலகத்தில் பதிவு செய்யவேண்டும்.
7. பெற்றோர் இந்தக் கல்லூரியில் பயிலும் தங்கள் பிள்ளைகளின் தேர்ச்சி மற்றும் நடவடிக்கைகளை அவ்வப்போது அவர்களுடைய பொறுப்பு ஆசிரியர்களைத் தொடர்பு கொண்டு கேட்டு தெரிந்துகொள்ள வேண்டும். குறைந்தது மாதத்திற்கு ஒருமுறையாவது வகுப்பாசிரியரைச் சந்திப்பது சாலச் சிறந்தது.
8. மாணவர்கள் தங்கள் வகுப்பறையில் மற்றும் தங்கள் ஆய்வகங்களில் உள்ள உபகரணங்களை உபயோகிக்கும்போது மிக கவனமாக செயல்பட வேண்டும். உபகரணங்களை சேதப்படுத்தவோ, தவறாக உபயோகிக்கவோ கூடாது. தவறும் பட்சத்தில் ஆசிரியர்கள் விதிக்கின்ற அபராதத் தொகையைக் கட்ட வேண்டும்.
9. பெற்றொர் ஆசிரியர் கழகக் கூட்டத்திற்கு பெற்றோர் அல்லது கண்காணிப்பாளர் கண்டிப்பாக வரவேண்டும்.
10. மதிய உணவிற்காக கல்லூரி வளாகக் கதவு திறக்கப்படமாட்டாது. எனவே மாணவர்கள் மதிய உணவு கொண்டு வரவேண்டும் அல்லது கல்லூரி வளாகத்தில் உள்ள உணவகத்தைப் பயன்படுத்தவேண்டும்.
11. கல்லூரி விடுதியில் தங்கிப் பயிலும் மாணவர்கள் விடுதியின் சட்ட திட்டங்களுக்கு பணிந்து நடக்கவேண்டும்.
12. கல்லூரி முடிந்த பின் காரணமின்றி கல்லூரி வளாகத்திலோ பேருந்து நிலையத்திலோ நிற்கக் கூடாது. கல்லூரி வளாகத்தில் புகையிலை, பான் பராக் மற்றும் சிகரெட் போன்ற போதை வஸ்துக்களை மாணவர்கள் கண்டிப்பாக பயன்படுத்தக் கூடாது. தவறும் பட்சத்தில் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.
13. மாணவர்கள் எக்காரணம் கொண்டும் கல்லூரி வளாகத்தில் அலைபேசி கொண்டு வரக்கூடாது.
14. விடுதி மாணவர்கள் தவிர மற்ற மாணவர்களுக்கு மாலை வேளைகளில் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் விளையாட அனுமதி இல்லை.

மேற்கண்ட விதிமுறைகளைப் படித்துத் தெரிந்து கொண்டேன்.

மாணவர் கையொப்பம்.